எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Publication of All Ceylon Gandhi Seva Sangam

மலர் – 26 | இதழ் 01 | ஒக்ரோபர் – நவம்பர் 2010 | விலை ரூபா 10/-

## மகாத்மா காந்தியின் 141வது ஜெயந்தி தினத்தில் மனித விழுமியங்களின் மாண்பு பற்றிச் சிந்திப்போம்

சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு, அகிம்சை ஆகிய மனித விழுமியங்களை வாழ்க்கையில் கடைப்பிடிக்காது புறக்கணிப்போமாகில் நாட்டில் அமைதி சமாதானம், நிம்மதி உருவாக என்றுமே இடமில்லை.

மனித நாகரீகம் என்பது வெறுமனே செங்கற்களாலும், சாந்தினாலும், இரும்பினாலும் இயந்திரங்களினாலும் கட்டி எழுப்பப்படுவதில்லை. மனிதர்களின் நன்னடத்தையினால் உருவாக்கப்படுவதே நயத்தகு நாகரீகம் ஆகும். சத்தியம், அன்பு, அகிம்சை உலகை உய்விக்கும் உன்னதமான மனித விழுமியங்களாகும். மனித விழுமியங்களைப் புறக்கணிப்பதாலேயே சமூகம் இன்று அமைதி, நிம்மதி இழந்து இடர்ப்படுகின்றது.

அன்பு உலக மகாசக்தி, அன்பினை உபாசித்து வருபவர்கள் நிறைவாழ்வு வாழ்பவர் ஆவர். சத்தியமோ எனில் என்றும் உள்ள பொருள், எல்லாம் வல்லது, எங்கும் நிறைந்தது. பரப்பிரம்மமாக விளங்குவது. சாந்தியும் சமாதானமும் நாட்டில் கட்டி எழுப்பப்பட வேண்டும் என்றால் உத்தமர் காந்தியின் செந்நெறியே கைகொடுக்கும். உயிர்களிடத்து அன்பும் கரிசனையும் காட்டி வாழப் பழகுவோம். இதற்கு ஒரு சதமேனும் செலவு செய்யவேண்டியதில்லை. அகிம்சை என்பது பிறர்க்கு இன்னாமை செய்யாமை ஆகும்.

காந்தி ஜெயந்தி தினத்தில் காந்தியடிகளை வாயார வாழ்த்துவோம். "சத்தியம்" சார்ந்த உத்தம நெறிகளை உயர்த்திப் பேசுவோம். பண்பாடு கலாச்சார விழுமியங்களிலிருந்து சமூகம் நழுவிச் செல்லாமல் தழுவிச் செல்லப் பாடுபடுவோம். காந்தியடிகளின் 141வது ஜெயந்தி தினத்தில் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு ஆதரவு நல்குவது பற்றிச் சிறிதளவேனும் சிந்திப்போமாக.

–"கா"

## 141ஆவது ஜெயந்தி தின நிகழ்வுகள்

மகாத்மா காந்தி அடிகளின் 141வது பிறந்தநாளை அகில இலங்கை காந்தி சேவா சங்கம் இம்முறை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் சிறப்பாக அனுஷ்டிக்கின்றது. நிகழ்வின் முக்கிய அம்சமாக இரு இடங்களிலும் "காந்தி நூலகங்கள்" திறந்து வைக்கப்படவிருக்கின்றன. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அடிகளாரின் உருவச் சிலையடியில் மௌனப் பிரார்த்தனை, மலரஞ்சலி, மலர்மாலை அணிவித்தல் ஆகிய நிகழ்வுகள் நடைபெற்று கூட்டமும் நூல் நிலைய திறப்பு விழாவும் சங்கத்தின் யாழ்.கிளை அலுவலகத்தில் ஆ. வடிவேலு அவர்கள் தலைமையில் நடைபெறும்.

கிளிநொச்சி உருத்திபுரம் காந்தி நிலையத்தில் நூல் நிலையம் திறந்து வைக்கப்பட்டு அகிம்சை தின நிகழ்வுகளும் இடம்பெறவிருக்கின்றன. இந் நிகழ்வுகளில் சங்கத்தின் உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் பொதுமக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு நிர்வாகம் அன்புடன் அழைக்கின்றது.



கணேசானந்த மகாதேவ சுவாமிகள்
மகாதேவ ஆச்சிரமம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி

## இன்று சர்வதேச அகிம்சை தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மகாத்மா காந்தி அடிகளாரின் பிறந்த தினமான அக்டோபர் 2ஆம் திகதியை ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச அகிம்சை தினமாக 2007ஆம் ஆண்டு பிரகடனம் செய்தது. அன்று முதல் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 2ஆம் திகதி உலகளாவிய ரீதியில் காந்தி அமைதி தினமாக அனுஸ்டிக்கப்படுகின்றது. மகாத்மா காந்தி தலைமை தாங்கிய அகிம்சை மாதிரிக்கு உலகம் வழங்குகின்ற பிரதிபலிப்பாக இது கொள்ளப்படுகின்றது.

"அகிம்சைப் போர் கூர்மையான வாளைவிட வலிமையானது. அகிம்சையும் சத்தியமுமே எனது கடவுள். என் எல்லா செயல்களிலும் மணிகளைக் கோர்க்கும் இழைபோல் அகிம்சை இருக்கின்றது. அகிம்சை இடம்பெறாத ஒரு செயலையும் நான் செய்ததில்லை" என்று காந்தியடிகள் கூறுகின்றார்.

அகிம்சை என்பதற்கு உலகளாவிய அன்பு என்பதே உட்பொருளாகும். அன்பு பெருகும்போது வன்முறை என்ற பேச்சுக்கே இடமிருக்காது. காந்தியடிகள் வன்முறையை ஆட்சேபிக்கின்றார். காரணம் வன்முறை தற்சமயத்திற்கு நல்லது என்று தோன்றினாலும் அது இழைக்கும் தீங்கு நிரந்தரமானது என்பது அது தரும் விளக்கமாகும்.

இன்றைய நாளில் இன, மத, மொழி வேறுபாடுகளை மறந்து உலக ஒற்றுமைக்காகவும் சமாதானத்திற்காகவும் பிரார்த்திக்குமாறு அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது.




அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் உயர்திரு. ஆ.வடிவேலு அவர்கள் அண்மையில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் கௌரவ மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார். இவர் வடமராட்சி வடக்கு மத்தியஸ்த சபையின் தவிசாளராகவும் பணியாற்றி வருகிறார்.

**கடமையைச் சரிவரச் செய்யுங்கள்**

# 96வது அகவை

காந்தி பக்தர் முதுபெரும்புலவர் வை.க.சிற்றம்பலம் அவர்கள் 96ஆவது வயதைப் பூர்த்தி செய்தாலும் என்றும் இளமையான, இனிமையான, அமைதியான சுபாவம் கொண்ட நல்ல மனிதர். ஆழ்ந்த அறிவும், அனுபவமும் கொண்ட பழம்பெரும் தமிழாசியரியர். புலவர், எழுத்தாளர், பாடலாசிரியர் என்ற பல்பரிமாணம் கொண்ட நல்லறிஞர். இலகு தமிழில் கவிபாட வல்லவர். எளிமையான தோற்றமும் இனிய பண்புகளும் கொண்ட சைவ உணவுக் காரர். அனைவரிடமும் அன்பு கலந்து உரையாடுபவர். பிறரின் கருத்துக்களையும் செவிமடுப்பவர்; ஏற்றுக்கொள்பவர்.

இத்தனை சிறப்புகள் பொருந்திய சிற்றம்பலம் ஐயா அவர்கள் மகாத்மா காந்தியடிகளைக் கடவுளாகக் கருதுபவர்.




அவரின் இத்தகு நற்பண்புகளுக்குக் காரணம் அவர் ஒரு காந்தி பக்தராக வாழ்வதே என்றால் அது மிகையாகாது. மகாத்மா காந்தி பற்றி பல கவிதைகளை எழுதியுள்ள பெரும் புலவர் அவர்கள் 2009 பெப்ரவரி - மார்ச் "காந்தீயம்" இதழுக்குச் சிறப்புச் செவ்வியொன்றை வழங்கியிருக்கின்றார்.

முதுபெரும் புலவரின் கவி ஆற்றலைப் புலப்படுத்தும் வகையில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் அனுசரணையோடு, பேரவையினால் மாதந் தோறும் வெளியிடப்படும் "ஞானச்சுடர்" மலரில் புலவர் எழுதிய மரபுக்கவிதைகள், அவர் எழுதிய பிரபந்தங்களில் எடுத்துக் காட்டாகச் சில பாடல்கள், மற்றும் அறிஞர் பெருமக்களின் ஆக்கங் களைத் தாங்கி, அவரின் 96ஆவது அகவை நூல் 16-04-2010 இல் வெளியீடு செய்யப்பட்டிருக்கின்றது.

புலவர் மணி சிற்றம்பலம் அவர்கள் பல தசாப்த காலமாக இறை பாசுரங்களைப் பாடி நூல் உருவேற்றி, வெளியிட்டு வருகின்றார். ஈழத்து சிவாலயங்களான திருக்கோணேஸ்வர ஆலயம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் பொன்னம்பல வாணேஸ்வரம் முதலான கோயில்களுக்குத் தனித்தனியாக பல பாசுரங்கள், பண்ணிசைப் பாடல்களைப் பாடியுள்ளார்.

இதனைவிட திரு ஊஞ்சல்கள், இடர்களை பதிகம், பிள்ளைத்தமிழ் பாமாலை, திருவிரட்டை மணி மாலைகள், மும்மணி, நான்மணி மாலைகள் எனப்பல பாடல்களைப் பாடியுள்ளார். மேலும் சந்நிதி ஞானச்சுடருக்கு, பன்னிரு வருடமாகப் பாடியும் வருகின்றமை இவரின் கவிப்புலமைக்குச்

-5ம் பக்கம் பார்க்க

## திருத்தம்

1. **ஆகஸ்ட் - செப்ரெம்பர் இதழின் 6ம் பக்கத்தில் வெளியான ஆயுட்கால அங்கத்தவர் விபரத்தில் திருமதி ஞானம் இரத்தினம் - சுவிஸ் என தவறுதலாக பிரசுரமாகியுள்ளது. அவுஸ்திரேலியா என்பதே சரியானதாகும்.**
2. **சென்ற இதழ் மலர் இல.26 என்பதை 25 எனத் திருத்தி வாசிக்கவும்.**

## மகாத்மாஜி தோன்றினார்

மனிதவின மேம்பாட்டிற்கு மூலவோ பண்பாடென்ப ரதன்
முடியைப்பற்ற முயன்று வெற்றிபெற்றவர் யாருமில்லை பாரில்
மனிதவியலை யளந்து மட்டுப்படுத்திய மையால் நோவுற்று
முதுகாடு நோக்கிய வேளை மகாத்மாஜி தோன்றினார்

சுயநல வாதிகளின் சுரண்டல் கழுகுபோல விழித்திருக்கும்
சமூகக் கட்டுப்பாடு சம்பிரதாயம் மூட நம்பிக்கை
பயத்தினால் விளைந்த பதற்றமான சூழல் போன்றவற்றில்
பெரியோர்கள் சிக்கிய வேளையில் மகாத்மாஜி தோன்றினார்

பணம் படைத்தோர் நினைக்கத் தேவையான பண்டங்களைப்
பாத சேவையாளர் கொணர்ந்து பரப்புவர் ஏழைகளோ
உணவுடை உறையுள் கல்வியொடு மருத்துவத்தை நாடோறும்
உபாதிப்பட்டுத் தேடிய வேளை மகாத்மாஜி தோன்றினார்

நீதி கருணை நிலத்தோர் நாடும் தனிமனித உரிமை
நடுநிலை உயிர் நெடியதெனக் கருதுமுயரிய கோட்பாடு
ஆதிமுதல் வந்த பேச்சுச் சுதந்திரம் ஆடவளினக் காப்பு
அபகரிக்கப்பட்டவேளை மகாத்மாஜி தோன்றினார்

கொடுங்கோல் அடாவடித்தனம் மனித அவலத்தை ஊக்குவித்து
கோன் அறத்தைக் கொளுத்தியது பசிபிணி விஞ்சி காட்டாறுபோல்
கொடுந்துயர் சுதேசிகளை அள்ளிச் செல்கையில் வெளியார் மழை
கதவுகளைப் பூட்டிய வேளை மகாத்மாஜி தோன்றினார்

எளியோர் வலியோர் என்ற பிரிவினை மக்கட் சமுதாயத்தில்
எல்லாத் துறைகளிலும் புரையோடியமை துரதிட்டமே
ஒளிராதோ அமைதியுவகை நிறை வாழ்விலென எளிஞர்
ஏங்கித் தத்தளித்த வேளை மகாத்மாஜி தோன்றினார்

அன்பிலல்ல வன்பு நெறியிலே வாழப் பழக்கப்பட்டவர்கள்
அகநிலையே உண்மையென்று அறியாதிருந்த அபோதகர்கள்
அந்நியர் கால்பிடித் தரசபதவிகளி லமர்ந்து அவர்களுக்கு
அடித்தொழில் புரிந்தவேளை மகாத்மாஜி தோன்றினார்.

**-மணிமன்றன், யாழ்ப்பாணம்.**

**(காந்தி அடிகளின் 141ஆவது பிறந்தநாளை முன்னிட்டு இக்கவிதை பிரசுரிக்கப்படுகின்றது)**

## காந்தி நூல்கள் அன்பளிப்பு

டாக்டர் ஜே.ஸி. குமரப்பா எழுதிய காந்தியப் பொருளாதாரம் மற்றும் 1944இல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக இருந்த பி.சி.ஜோஷிக்கும் காந்திஜிக்கும் இடையிலான கடிதப் போக்குவரத்து ஆகிய நூல்களை விஸ்வமடுவைச் சேர்ந்த நடராசா சிவசுப்பிரமணியம் எமது காந்தி நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார். அவருக்கு அகில இலங்கை காந்தி சேவா சங்கம் நன்றி தெரிவிக்கின்றது.

## ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

காந்திய சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட கட்டுரைகள், காந்தி தொடர்பான செய்திகள் மற்றும் உள்ளூர் உற்பத்திகள் சம்பந்தமான ஆக்கங்களை வாசகர்கள் எமக்கு அனுப்பி வைக்க முடியும். அவற்றின் பொருத்தப்பாடு மற்றும் தரம் கண்டு அவை காந்தீயத்தில் பிரசுரிக்கப்படும் . ஆக்கங்களை அனுப்பி வைக்கவேண்டிய முகவரி,
ஆசிரியர், "காந்தீயம்" இல.774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## படிப்பினை

மனிதரெல்லாம் ஒரு கடவுள் மக்களென்று
காந்தியைப் போல் மனதார மதிக்க வேண்டும்
புனிதமுள்ள பரம்பொருளின் பெயரைச சொல்லி
போர்மூட்டும் மதவெறியைப் போக்க வென்றே
அனுதினமும் தவங்கிடந்த காந்தி அண்ணல்
அனுஷ்டித்த சமரசத்தில் ஆர்வம் வேண்டும்
தனது மதம் தனது இனமென்றெண்ணும்
தருக்குகளை காந்தியைப் போல் தவிர்க்க வேண்டும்

(தொடரும்..)

(நாமக்கல் கவிஞர் அவர்களின் "காந்தி அஞ்சலி" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றது)

எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

காந்தி ஆண்டு 142, ஒக்ரோபர், நவம்பர் - 2010

## ஆதரவற்றோருக்குக் கைகொடுப்போம்.

முரண்பாடுகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி குறித்துப் பேசுவது இன்று தட்டிக் கழிக்க முடியாத ஒரு விடயமாகவும் ஆறப்போட முடியாத பொருளாகவும் மாறியுள்ளது. கோர யுத்தத்தின் வடுக்களை இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீக்கமறக் காண முடியும். உட்கட்டு மாணங்களைச் சீர் செய்து மக்களின் இயல்பான வாழ்வுக்கு வழிகோல வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். கட்டடம், நீர்ப்பாசனம், மின்சாரம், விவசாயம், மீன்பிடி போன்ற பௌதீக வளங்களை ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி சீராக்க முடியுமென்று நம்பிக்கை கொள்ளலாம்.

மறுபுறத்தில் குடும்ப உறவுகளை இழந்து நிர்க் கதியான நிலையில் அவல வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களைப் பற்றிச் சிந்திக்காது இருக்க முடியாது. குறிப்பாக தந்தையையும் தாயையும் இழந்த பாடசாலை செல்லும் வயதிலுள்ள சிறார்களின் நிலைமை மிகவும் கவலைக் குரியதாகும். அவர்களின் எதிர்காலம் குறித்து சிந்திக்க வேண்டிய கடமை ஒவ்வொரு சமூகப்பொறுப்புடைய நபர் களையும் சார்கின்றது. எத்தனையோ அரச மற்றும் தனியார் சிறுவர் இல்லங்கள் அவர்களைப் பொறுப்பேற்று பராமரித்து வருகின்றன. இருந்தும் கவனிப்பாரற்ற நிலையில் கூலி வேலை செய்து பிழைக்கும் சிறுவர்கள் ஏராளமாக உள்ளனர். உறவினர்கள் இருந்தும்கூட அவர்களை முழுமையாகக் கவனிக்கும் நிலையில் மீள்குடியேற்றப் பிரதேசங்களில் தொழில்வாய்ப்புக்களோ, அடிப்படை வசதிகளோ இல்லை. எனவே சிறுவர் தொழிலாளர் பெருகுவது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறி வருகின்றது.

ஆகவே இப்பிள்ளைகளை இல்லங்களில் இணைத்து கல்வி வழங்குவது அவசியமாகின்றது. இதற்கு பெரிய மனம் படைத்த பரோபகாரிகளின் ஆதரவு இன்றியமையாததாகும். காரணம் சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் பாரிய நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டே இயங்கி வருகின்றன. எனவே வசதி படைத்தவர்கள், குழந்தைகள் இல்லாத பெற்றோர், இப்பிள்ளைகளைத் தத்து எடுத்து இல்லங்களில் சேர்த்து கல்வி பெற வைப்பதால் சமூகத்திற்கும் தமக்கும் துணையாகின்ற நல்ல மனிதர்களாக உருவாக்க முடியும். இதன் மூலம் ஆதரவற்ற சிறுவர்களின் வாழ்வுக்கு ஒளியூட்டுவதோடு தங்களுக்கும் எதிர்கால வாழ்வின் நம்பிக்கையை ஏற்படுத்தலாம்.

இதைவிட வாழ்க்கைத் துணையை இழந்தவர்கள், பிள்ளைகளை இழந்தவர்கள், ஊனமடைந்தவர்கள், மனோநிலை பாதிக்கப்பட்டவர்கள் என ஏராளமானோர் இன்னும் நிவாரணக் கிராமங்களிலும் தடுப்பு முகாம்களிலும் மீள் குடியேற அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் மிகுந்த கஷ்டங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களும் நாட்டின் ஏனைய பிரஜைகள் போன்று வாழ்வதற்கு ஏற்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படட வேண்டும்.

அரசாங்கம் மட்டுமல்ல பலதரப்பட்ட சமூக நிறுவனங்களும் இவர்களுக்கான மறுவாழ்வுக்கான வழிகள் குறித்து ஆராய்ந்து செயற்பாட்டில் இறங்க வேண்டும்.

ஆதரவற்ற எமது சகோதர சகோதரிகளுக்கு உதவ முன் வாருங்கள். அவர்களைக் கண்டு அவர்களின் துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள். ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணுங்கள்.

-ஆசிரியர்.

## வியத்தலும் இலமே

### -சான்றோர் சிந்தனை-

கல்வி மற்றும் அறிவாராய்ச்சியில் செயலாடல் களுக்கான மேகலா நிலையம் வெளியிட்டுள்ள "வியத்லும் இலமே" என்ற நூல் கிடைக்கப்பெற்றது இதனை தி.உதயசூரியன் தொகுத்துள்ளார். மாணவர் களுக்கான பாடநூல்களையும் எழுதி வெளியிட்டுள்ள தி.உதயசூரியன் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வெளியீடாக வந்த "சத்திய விஞ்ஞானம்" என்ற நூலுக்கும் பதிப்பாசிரியர்களுள் ஒருவராக விளங்கியவர். ஆசிரியப் பணியாற்றி தற்போது வவுனியா கல்வி அலகில் சேவையாற்றும் உதயசூரியன் பரந்த சமூகப் பார்வையும் ஆய்வுத்திறனும் உடையவர்.

இந்நூலிலே விபுலானந்த அடிகள், புத்த பகவான், இராமகிருஷ்ணபரமஹம்ஸர், பாரதி, மகாத்மா காந்தி, அரவிந்தர், சுவாமி விவேகானந்தர், சின்மயானந்தா, ரமணர், ஔவையார், வினோபா போன்ற மகான்களின் அருளுரைகளும் அறிவுரை களும் அடங்கியுள்ளன.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அவர்கள் அணிந்துரை எழுதியுள் ளார்கள். காந்தி ஆசிரியர் பொ.கந்தையா அவர்கள், இந்நூலின் ஆசிரியருக்கு தனது அன்பைத் தெரிவித்து எழுதிய உரையிலே "தமிழ் அறிவும் ஆத்மீக அறிவும் கல்வியில் சேர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் இருக்க வேண்டும். அதில் சான்றோர் சிந்தனை யும் இருக்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளமை சிந்தனைக்குரியதாகும்.

பதிப்புரை நூலின் பெறுமதியை எடுத்தியம்பு வதாக எழுதப்பட்டுள்ளது. அதில் ஒரு பகுதியை இங்கே காணலாம்.

அறிவுசார் செயலாடல்களைக் கூர்மைப்படுத்த வேண்டிய அத்தியாவசியம் மிக அரிதாகவேனும் உணரப்பட்டுள்ள நமது சமகாலத்தில் நம்மாலான பங்கினை நம் சமூகத்திற்கு வழங்கும் நோக்கில் மேகலா நிலையம் தொழிற்பட்டு வருகின்றது.

உலகை வர்த்தமயமாக்கல்
தகவல் ஏகாதிபத்தியம்
நுகர்வோர் கலாசாரப் பரம்பல்
மெகாவிளம்பரங்கள்
வர்த்தக நோக்கங் கொண்ட தென்னிந்திய சினிமா
மற்றும் தொலைக்காட்சித் தொடர்கள்
களியாட்ட விழாக்கள்.

போன்ற இன்னோரன்ன புறக்காரணிகள் மனித மனங்களை அதனதன் இருப்பு நிலைகளிலிருந்து எங்கெங்கோ கடத்திச் சென்றுகொண்டிருக்கின்றன. இத்தகையதொரு சமூக அசைவியக்க நிலைமையில் அறிகைத் தொழிற்பாடு என்பதும் பண்பாடு, ஒழுக்கம், விழுமியம் என்பனவும் கேள்விக்குரியதொன்றாக மாறி வருவதை அவ தானிக்க முடிகிறது.

உலகை வர்த்தக மயமாக்கும் முகவர்கள் மனிதர் களிடையே எல்லை கடந்த பேராசையைத் தூண்டி விட்டுள்ளதால் அவர்கள் மீளவே முடியாத தாழ்வுச் சிக்க லுக்கும் பண நோய்க்கும் ஆளாகிக்கொண்டிருக்கின்றனர்

பணமிருந்தால் எதையும் செய்யலாம்
பணத்திற்காக எதையும் செய்யலாம்

(5ஆம் பக்கம் பார்க்க..)

# நுகர்வு வெறியில் பிறக்கும் கொலைவெறி பள்ளி மாணவர் வன்முறை

-வேல்ராசன்

### வளரும் பருவத்தை வலிமையாக்கும் கட்டுப்பாடு

அப்படி ஒரு கட்டுப்பாட்டை, அதாவது கல்லூரி வளாகத்தில் செல்பேசியைப் பயன்படுத்தக்கூடாது என்று அண்ணா பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்திய போது, பத்திரிகைகளும் முற்போக்கு முகாமும் ஆவேசத்துடன் அதனைக் கண்டித்தன. இது சுதந்திரத்துக்கும் தனிநபர் உரிமைக்கும் ஜனநாயக நெறிமுறைகளுக்கும் எதிரானது என்று வாதிட்டார்கள். அமெரிக்க மாணவர்களிடையே வன்முறையை நிறுத்துவதற்கு துப்பாக்கி வியாபாரத்தைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபோது, ஜனநாயக உரிமையின் பெயரால்தான் அது அங்கே நிராகரிக்கப்பட்டது.

இந்த வாதங்களில் ஒரு வெங்காய "உரிமை"யும் உண்மையில் இல்லையென்பது ஒருபுறமிருக்க, இந்த உலகமே கட்டுப்பாட்டில்தானே இயங்கி வருகிறது? ஒரு தொழிலாளிக்கு சீருடை அணிய வேண்டும், குறித்த நேரத்தில் வேலைக்கு வர வேண்டும், குறிப்பிட்ட இடைவெளி நேரத்தில்தான் மதிய உணவு அருந்த வேண்டும் என்று பல கட்டுப்பாடுகள் இல்லையா? பல அலுவலகங்களிலும் செல்பேசியில் பேசக்கூடாது என்று கட்டுப்பாடு வைத்திருக்கிறார்களே, இதனால் என்ன குடியா முழுகிப்போய் விட்டது? விதியின் பெயராலும், நடைமுறை ரீதியிலும் உழைக்கும் வர்க்கத்தின் மீது ஆயிரம் கட்டுப்பாடுகள் வைத்திருக்கும் முதலாளித்துவம், சமூகத்தில் சீரழிவுக் கலாசாரத்தைப் பரப்புவதற்கு மட்டும் தனக்கு சுதந்திரத்தைக் கோருகிறது.

வீட்டிலும், பள்ளியிலும் கட்டுப்பாடு இல்லாத மாணவர்கள்தான் வன்முறை எண்ணம் கொண்டவர்களாகத் தலையெடுக்கின்றனர். விடலைப் பருவ உளவியலின் காரணமாகப் பெற்றோருடனும் சூழலோடும் முரண்படுகிறார்கள். மாணவர்களின் உடல் மாற்றத்திற்கேற்ப நடக்கும் இந்த உளவியல் வெளிப்பாடுகளை, மேற்கண்ட நச்சுக்கலாச்சாரம் ஊதிப்பெருக்குகிறது. இதனால் தனிமைப்படும் மாணவர்களைத்தான் வன்முறை எண்ணம் தின்று சீரழிக்கிறது. மாணவர்களை உடலுழைப்பிலும், விளையாட்டிலும் ஈடுபடுத்துவதுதான் இந்த முரண்பாட்டைத் தீர்ப்பதற்குரிய வழி. ஆனால் இந்தச் சூழல் நமது கல்வி முறையிலோ, பண்பாட்டிலோ இல்லை.

### வளரும் சிறவருக்கு உடலுழைப்பு அவசியம்.

இளம் மாணவர்களின் வயதினையொத்த சிறார்கள், நாடெங்கிலும் இலட்சக் கணக்கில் உதிரித் தொழில்களில் ஈடுபடுகின்றனர், குழந்தைத் தொழிலாளர் உழைப்பைத் தடைசெய்ய வேண்டும் என இவர்களது வாழ்க்கை குறித்து கவலைப்படுவது தொண்டு நிறுவனங்களின் நாகரீகப் பணியாக இருக்கிறது. படிக்க வேண்டிய வயதில் இவர்களை இவ் வேலைகளுக்கு அனுப்பியது பெற்றோர்களின் குற்றமென நிறுவனங்கள் சாதிக்கின்றன. உண்மையில் பணமில்லாதவனுக்கு எதுவுமில்லை என இந்த சமூக அமைப்பை மாற்றிய அரசும், ஆளும் வர்க்கங்களும்தான் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட வேண்டும்.

இது ஒரு புறமிருக்க, இக் குழந்தைகள் விடலைப் பருவச் சேட்டைகளையோ, வன்முறைகளையோ செய்வதில்லை. தேநீர்க்கடைகளில் குவளை கழுவும் சிறுவனோ, ஓட்டலில் மேசை துடைக்கும் சிறுவனோ இத்தகைய வன்முறை வெறிக்குப் பலியாவதில்லை. சமூகத்துடன் யதார்த்த உறவில் இருக்கும் சிறுவர்கள், பண்பையும் முதிர்ச்சியையும்தான் பழகிக் கொள்கின்றனர். வயதுக்கு மீறிய அதீத உழைப்புத்தான், இவர்களைப் பின்னாளில் உதிரிக்குணம் கொண்டவர்களாக மாற்றிவிடுகிறது. அப்போதும்கூட இவர்கள் சமூகத்தின் மீது வன்முறை செலுத்தும் மேட்டுக்குடிப் பொறுக்கிகளைப் போல மாறுவதில்லை.

ஆம், மாணவர்களை குறிப்பிட்ட அளவில் உடலுழைப்பில் ஈடுபடுத்துவதன் மூலமே, அவர்களது பருவப் பிரச்சினைகளைக் கடந்து ஒரு சமூக மனிதனாக வளர்க்க முடியும். கோடை விடுமுறையில் சிறுவர்களை சிறு பட்டறைகளுக்கோ, இரு சக்கர வாகன பழுது நீக்கும் கடைக்கோ, கட்டிட வேலைக்கோ, விவசாய வேலைக்கோ அனுப்பினால் பட்டை தீட்டப்பட்ட வைரக் கற்களாகப் புடம்போடப்பட்டு வருவார்கள். உடலுழைப்புடன் கூடிய சுயமதிப்புடன் சமூகத்தைப் பற்றி அறிந்துகொள்வார்கள். கட்டுப்பாட்டுடன் பணியாற்றுவதன் மூலமே இச் சமூகத்தின் அங்கத்தினன் என்ற தகுதியைப் பெற முடியும் என்பதைத் தங்களது சொந்த அனுபவத்திலிருந்து புரிந்துகொள்வார்கள்.

ஆனால் நடுத்தர வர்க்கமோ தங்களது செல்வங்களை டென்னிசுக்கு, கணினிப் பயிற்சிக்கும் பாட்டு வகுப்பிற்கும் அனுப்பி நம்பர் 1 ஆக்குவதற்கு மட்டுமே மனப்பால் குடிக்கிறது. இது மாணவர்களுக்கு தனிநபர் வாதத்தையும் சுயநலத்தையும் காரிய வாதத்தையும் கற்றுத் தருகிறதே ஒழிய, நல்ல குடிமகனாக்குவதில்லை. மேலும் கடுமையான போட்டிகள் நிறைந்த இக்காலகட்டத்தில் தோல்வி, குழந்தைகள் மனதை ரணமாக்குகிறது. விஜய் டி.வி.யின் பாட்டுப் போட்டியில் தோல்வியுற்றதால் வெளியேற்றப்பட்ட குழந்தைகள் அழுவதைப் படம் பிடித்துக் காண்பிப்பதை இங்கு நினைவுபடுத்திக்கொள்வோம்.

வளரும் குழந்தைகளுக்கு கலைத் திறமைகளைக் கற்றுத் தருவதைவிட, அவர்களை மக்களின் பால் பற்றுக்கொண்ட நன்மக்களாக மாற்றுவதே அத்தியாவசியமானது. உண்மையில் அவர்களது வன்முறை எண்ணத்தை மடைமாற்றும் சூட்சுமம் இதில்தான் அடங்கியிருக்கிறது. ஆனால் நடுத்தர வர்க்கக்குழந்தைகளுக்கு, உடலுழைப்பு அறவே கிடையாது. எல்லா வேலைகளுக்கும் இயந்திரங்கள் இருக்கின்றன இது போக வேலையாட்கள்! பெற்றோர்கள் பணியாட்களை மிரட்டுவதுபோல பிள்ளைகளும் செய்கிறார்கள். குறைந்த பட்சம் தன்னைப் பராமரித்துக்கொள்வதைக் கூட இக்குழந்தைகள் செய்வதில்லை. பெற்றோரும் விரும்புவதில்லை. தான் சாப்பிட்ட தட்டைக் கழுவுவதற்கோ, உடுத்தும் உடையைத் துவைப்பதற்கோ பழகிக்கொள்ளாத ஒரு சிறுவன்தான், இந்த உலகம் தனக்காகப் பணி செய்யப் படைக்கப்பட்டிருப்பதாக எண்ணுகிறான். இந்த அணுகுமுறையில் நெருடல் வரும்போது, தவிர்க்கவியலாமல் வன்முறையின் பக்கம் நகர்கின்றான்.

-தொடரும்

### நிழல் தரும்..

கடற்றொழிலை மேற்கொண்டுவந்த நாகர்கோவிலைச் சேர்ந்த 85 வயதான வயிரவப் பிள்ளை, சித்தன்கேணியைச் சேர்ந்த பாலாம்பிகை (68), சண்டிலிப்பாய் க.பாலசுந்தரம் (71) சுழிபுரம் ப.குமாரசூரியர் (86) ஆகியோரும் தமது கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டனர்.

இல்லத்தின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா 06-04-2008 அன்று சிறப்பாக இடம்பெற்றுள்ளது. அன்றைய தினத்திலேயே சிவபூமி அறிவாலயமும், சிவபூமி மருத்துவ நிலையமும் திறந்து வைக்கப்பட்டன.

முதலாவது ஆண்டு நிறைவுச் செய்தியில் "இறையருளாலும், இனிய மனிதர்களின் நற்பண்பினாலும் மூத்தோரை வாழ்விக்க உருவான எம் இல்லம் முதலாவது ஆண்டு நிறைவைச் சந்திக்கிறது. "பண்புடையாளர் மாட்டுண்டு உலகு" என்ற வள்ளுவர் வார்த்தை வீண் போகவில்லை. குறைவின்றி நிறைவாக இப்புனித கைங்கரியம் நடைபெற்று வருகிறது. இத் தெய்வப்பணி ஆரம்பிப்பதற்கு தன் உடைமைகளை அர்ப்பணித்த ஸ்ரீமான் திரு.கிருஷ்ணர் பாலச்சந்திரன் குடும்பத்தினரை நன்றியோடு போற்றுகின்றோம். ஆதரவுக் கரங்களால் அரவணைக்கின்ற அத்தனை அன்பு உள்ளங்களையும் வாழ்த்துகின்றோம்.

சூரியன், சந்திரன் நிரந்தரமாக உதிப்பதுபோல எம் இல்லம் என்றும் மலர உங்கள் அனைவரது ஆசிகளையும் எதிர்பார்க்கின்றோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிச்சயமாக இவ்வாறான சமூகப் பணிகளுக்கு அரசும், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் வர்த்தகப் பெரு மக்களும் கைகொடுத்து உதவ முன்வர வேண்டும். ஆதரவு அற்ற முதியோரின் இறுதிக்காலம் நிம்மதியாகக் கழிய சமுதாயத்தின் ஒத்துழைப்பு மிக மிக அவசியம். தன்னலம் கருதாது சேவையாற்றி வரும் அனைத்து நல்லுள்ளங்களையும் வணங்குவோம்; வாழ்த்துவோம்; துணை நிற்போம்.

மதிய உணவு பரிமாறும் நேரமானது. மதிய உணவையும் மறந்து பெரியவர்கள் எம்முடன் அளவளாவினர். எம்மை விட்டுப் பிரிய அவர்களுக்கும் அவர்களை விட்டுப் பிரிய எமக்கம் மனம் இடம் தரவில்லை. இயற்கையின் நியதியை உணர்ந்து கை அசைத்து அன்பாக வழியனுப்பினர் அந்த இனிய உறவுகள். எல்லோருக்கும் நன்றி கூறி நாமும் விடைபெற்றோம்.

**சந்திப்பும் நேர்காணலும் – எம். எஸ். எஸ். கீர்த்தி**

### 96ஆவது....

சான்று பகர்கின்றன. சிறந்ததொரு கல்விமானாக, சமயப் பற்றாளராக, சமூக சேவையாளராக அவர் விளங்கி வருகின்றார். இவ்வாறு இந்நூலுக்கு ஆசிச்செய்தி வழங்கிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் குறிப்பிட்டிருக்கின்றார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவராக விளங்கிய பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள் தனது வாழ்த்துரையில் பின்வருமாறு புலவரின் சிறப்புக்களைச் சொல்கின்றார்.

"கலாபூஷணம் வை.க.சிற்றம்பலவனார் ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் அறிகை வெளிப்பாடும் கொண்டவர். நல்லாசிரியராக நலன்தரு புலவராக விளங்கி வருபவர். ஸ்ரீலஸ்ரீ நாவலர் வழிநின்று சைவத்தையும் தமிழ்ப் புலமையையும் வளர்த்து வருபவர். சீர் இணுவைத் திருவூரின் சிறப்புக்கு அணிகலனாகி நிற்பவர். ஆசிரியப் பணியை உன்னதங்களுக்கு இட்டுச் சென்றவர். பல்வேறு புலமை விருதுகளின் நாயகராய் விளங்கி வருபவர். 1992ஆம் ஆண்டிலே கொழும்புத் தமிழ்ச் சங்கம் நிகழ்த்திய சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாக் கவிதைப் போட்டியில் விபுலானந்தர் நான்மணி மாலையை யாத்து முதற்பரிசைப் பெற்றுக்கொண்டவர். 1994ஆம் ஆண்டில் அவர் எழுதி வெளியிட்ட நல்லை முருகன் மீது பாடப்பெற்ற அந்தாதியானது மரபு வழியான செய்யுள் யாத்தலின் சிறப்புப் பண்புகளை வெளிப்படுத்தும் செவ்விய நூலாக்கமாக அமைந்தது. அந்நூலை ஆய்வு செய்த கொழும்பு தமிழ்ச்சங்கம் அந்த ஆண்டில் வெளி வந்த சிறந்த மரபுக்கவிதை ஆக்கமாகக் கண்டு அதற்குப் பரிசில் வழங்கியது. தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் அவர்கள், புலவர்களால் அழகு பெற்ற தமிழ் மொழிக்கு அழகு சேர்க்கும் ஈழத்துப் புலவர் வரிசையில் இன்று மூத்த புலவர் இவர். இலக்கண மரபில் நின்று கவிபாடிப் புகழ்பெற்ற சான்றோன். இளைய தலைமுறைக்கு இன்றை வழிகாட்டி. தமிழாசிரிய பரம்பரையின் எல்லையாக இன்று எம்முன் காட்சி யளிப்பவர். தள்ளாடும் வயதிலும் தளராத உறுதியோடு எழுதிக் குவிக்கும் பெரும்புலவர். வரலாறு அனைத்தும் மறதியின்றி எடுத்தியம்பும் கலைக்களஞ்சியம்" என்று தன் செய்தியில் கூறியுள்ளார்.

கலாநிதி பண்டிதர் க.வைத்தீஸ்வரக்குருக்கள் (ஓய்வு பெற்ற அதிபர்), சிவ.சண்முகவடிவேல், பண்டிதர் க.நாகலிங்கம், க.வாமதேவன், செல்லப்பா நடராசா J.P, விகடகவி மு.திருநாவுக்கரசு, கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆ.சபாரத்தினம் உட்படப் பல அறிஞர்களின் பல கோணங் களிலான புலவர் பற்றிய பார்வைகளும் உள்ளடக்கப்பட்டு வெளிவந்துள்ள இந்நூல் புலவரை வாழுங்காலத்தில் சிறப்பித்த பெருமைக்குரியது.

இந்நூலைப் படித்துப் பயன்பெற விரும்புவோர் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

முதுபெரும்புலவர் கலாபூஷணம்
வை.க.சிற்றம்பலம் ஆசிரியர்
ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

-ஷா

### வியத்தலும்...

என்ற சிந்தனை மக்கள் மனங்களில் விழுதெறியத் தொடங்கிவிட்டது. வளங்கள் யாவும் வீண் விரயம் செய்யப்படுகின்றன.

நமது வருங்காலச் சந்ததியினராகிய மாணவச் செல்வங்கள் பாடசாலைகளில் காலை ஒன்றுகூடல் பிரார்த்தனையின்போது வாசித்து நல் மனப் பாங்கினை வளர்த்துக்கொள்வதற்கு இந்நூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த நூலில் உள்ளடங்கியுள்ள சான்றோர் சிந்தனைகளை ஆதாரமாகக் கொண்டு 500 சொற்களில் அமையுமாறு மாணவர்கள் கட்டுரை வரைந்து பெறுமதியான பணப் பரிசில்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு :
கல்வி மற்றும் அறிவாராய்ச்சியியல்
செயலாடல்களுக்கான - மேகலா நிலையம்
52/2, காளி கோவில் வீதி,
கூமாங்குளம், வவுனியா.

# நிழல் தரும் விருட்சமாக சிவபூமி முதியோர் இல்லம்

சுழிபுரம், தொல்புரம் வழக்கம்பரை அம்மன் காலைப்பூஜை பார்த்துவிட்டு கோவிலுக்கு முன்னாலுள்ள வீதி யூடாக நடந்து செல்கிறோம், முதியோர்களைப் பராமரிக்கும் இல்லமொன்றைப் பார்ப்பதற்காக. சில இளைஞர்கள் எமக்கு வழிகாட்டுகிறார்கள். ஊதா நிறத்தில் பெரிய கட்டடமொன்று அதுதான் இல்லம் என்று.

இவ்விடம் மிகவும் புனிதமானது. இங்கு புகை பிடிப் பதோ மாமிசம் உண்பதோ ஆகாது. இனிய வார்த்தைகள் பேசி இறைவனை வாழ்த்துங்கள். ஆண்டவன் அபயகரங்களாக அன்பர்களை அனுப்புவான்.

உண்ணும்போதும், உறங்கும்போதும், விழிக்கும் போதும் கடவுளை நினையுங்கள்.

நல்லவர்கள் உறவு நல்வினைப் பயன் நல்லவர்கள் உங்களோடு வாழ்கிறார்கள். மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். யாதுமோர் குறைவில்லை.

இந்த வார்த்தைகளை வாயிலில் காண்கிறோம். வாயிற் காவலாளியிடம் அனுமதி பெற்று உள்ளே நுழைகிறோம்.

இல்லத்தின் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமை யாற்றும் அ.பரமேஸ்வரன் எம்மை அன்புடன் வரவேற்று நிற்கிறார். சிறிய அறிமுகத்துடன் உரையாடலை ஆரம்பிக் கின்றோம்.

சிவபூமி முதியோர் இல்லம்" என்று அழைக்கப்படு கின்ற இவ்வில்லம் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செந்தமிழ்ஞாயிறு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு.க.கணேஸ் அவர்களால் 2007-04-07 அன்று திறந்து வைக்கப்பட்டது.

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவரும் தற்போது அமெரிக்காவில் வதிபவருமான கே.பாலசந்திரன் அவர்கள் இந்த இல்லம் ஸ்தாபிக்கப் படுவதற்கு தனது உடைமைகளையும் சொத்துக்களையும் அர்ப்பணித்து பெருந்தொண்டு புரிந்துள்ளார்.

இவ்வில்லம் கேட்போர்கூடம், பொழுதுபோக்கு மண்டபம், விருந்தினர் மண்டபம், அறிவாலயம், மருந்தகம், போசன அறை, சமையல் அறை எனப் பல பிரிவுகளை உள் ளடக்கி சிறப்பான வடிவமைப்பில் வசதிகளோடு அமைக்கப் பட்டுள்ளது.

பராமரிக்க உதவியின்றிய தனியாட்கள் கிராம அலுவலர் மூலமாக விண்ணப்பம் செய்து பிரதேச செயலாளர் உறுதிப் படுத்திய பின்னர் இல்ல நிர்வாகத்தினரின் விசாரணை மூலம் இங்கு இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். இந்து மதத்தவர் மாத்திரம் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். அவர்களுக்கு சைவப் போஷணம் வழங்கப்படுகின்றது. உணவு, உடை, மருத்துவம் உட்பட சகல தேவைகளும் சேவைகளும் இலவச மாகக் கொடுக்கப்படுகின்றது.

பொதுசன மாதாந்த உதவிப்பணம், உலர் உணவு நிவாரணம் என்பன அரசினால் வழங்கப்படுகின்றன. தனி நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூபா 500 வழங்க அரசு அனுமதியளித்துள்ளதாக நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித் தார். அறக்கட்டளை, நினைவுதின அறக்கட்டளை, அன்பளிப்புக்கள் மூலமாக இவ்வில்லத்திற்கு நிதி கிடைக்கிறது.

இல்ல வளாகத்தில் ஞான வைரவர் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முதியோர்கள் வெளியே கோவில்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர். 2 தாதிப் பயிற்சியாளர்கள், ஒரு சமையல்காரர், ஒரு சமையல் உதவியாளர் 2 தொழிலாளர் உட்பட 8பேர் இங்கு வேலை செய்கின்றனர். அவர்களுக்கு உணவும் ஊதியமும் வழங்கப்படுகிறது.

வெளி இல்லச் சுவரை ஓவியங்கள் அலங்கரிக்கின் றன. அரும்பொருள், தொல்பொருள் மற்றும் பாரம்பரியங் களில் பெரும் பற்றுக்கொண்ட செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் மாட்டு வண்டில் ஏ-40 கார், தட்டி வான் போன்ற பொருட்களை வளாகத்தில் வைத்து இளைய தலைமுறையினருக்கு எமது வரலாற்றையும், வாழ்வியலையும் மறவாது காவிச்செல்லவேண்டியதன் அவசியத்தை உணர்த்தியுள்ளதாக எமக்குத் தோன்றியது.

அளவுக்கு மீறிய அனுதாபமும் அன்பும் உடைய மனிதனாக விளங்குவதனாலேயே செஞ்சொற்செல்வர் அவர் களால் இவ்வாறான சிந்தனைகளை நோக்கி பாதையை வகுக்க முடிகின்றது. செஞ்சொற்செல்வரின் சமயச் சொற்பொழிவுகள், சமய சம்பந்தமான ஒலிப்பேழைகள் என்பன இல்லத்தில் பொழுதுபோக்கு மண்டபத்தில் ஒலிக்க விடப்படுகின்றன.

உடுவிலைச் சேர்ந்த 82 வயது மூதாட்டி கே.பரமேஸ்வரி என்ற அம்மாவிடம் பேச்சைக் கொடுத்தோம். "நான் இப்போது தனிநபர் இங்கு ஒருவித குறையுமில்லாமல் இருக்கிறேன். இராமநாதன் கல்லூரியில் படித்தேன். இரு பிள்ளைகள் இருந்து இறந்துவிட்டனர். இங்கு கோவில் பூசை நடைபெறும். சமயம் சம்பந்தமான புத்தகங்களைப் படிப்பேன். காலை உணவு 8 மணிக்கும், மதியம் 12 மணிக் கும் இரவு உணவு 7 மணிக்கும் வழங்கப்படும். இங்கு நாயன்மார்கள் குருபூசை, பஜனை மற்றும் பாடசாலை மாணவர்களின் நாடகம், நடன நிகழ்வுகளும் நடைபெறும். நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம்" என்றார்.

நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த 96வயது மூதாட்டி ராஜேஷ்வரி இராமலிங்கம், "இந்து மாமன்றத்தைச் சேர்ந்த ஜெயசிங்கம் மூலமாக எனக்கு இங்கு வந்து சேரும் பாக்கியம் கிடைத்தது" என்று கலகலப்பாக எம்முடன் உரை யாடினார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மங்களேஸ்வரி வெள்ளியம்பலம் (வயது 76) கருத்துத் தெரிவிக்கையில் "இது எமக்குக் கோவில் மாதிரி. ஆசிரமம் மாதிரி மனநிறைவு தரு கின்றது. நாட்டுப் பிரச்சினையோடு எனது உறவினர்கள் வெளிநாடு சென்றுவிட்டனர். மற்றையோருக்கு என்னால் பிரச்சினை இருக்கக்கூடாது என்பதற்காக இல்லத்தில் சேர்ந் தேன். ஞானபூமி, ஞானஒளி, கலைமகள் போன்ற பத்திரிகை கள் படிப்போம்" என்றார்.

"நான் மல்லாகம் மகாவித்தியாலயம், உடுவில் மகளிர் கல்லூரி என்பவற்றிற் கல்வி பயின்றேன். இல்லத்தின் முதலாவது ஆண்டு நிறைவுச் செய்தி பத்திரிகையில் வந்தது. அதனைப் பார்வையிட்டபின் இங்கு வந்து சேர்ந்தேன். எமக்கு இங்கு விரும்பிய இடங்களுக்குப் போய் வரும் சுதந்திரம் உள்ளது" என்றார் மல்லாகத்தைச் சேர்ந்த தனலட்சுமி சிவகுரு (வயது 82)

"பல இடப்பெயர்வுகளைச் சந்தித்தோம். நல்லூரிலும் இருந்தோம். அப்போது திவ்யஜீவன சங்கத்தில் தொண்டராக இருந்தேன். கல்யாண மண்டபத்தில் நிகழ்வொன்றில் ஆறு.திருமுருகன் அவர்களைச் சந்தித்தேன். அந்த அறிமுகத் தோடு செல்வச் சந்நிதியிலும் சந்தித்தேன். அதன் மூலமாக இத்தொடர்பு கிடைத்தது. முதியோர் கல்வித் திட்டத்திலும் பங்கு கொண்டுள்ளேன். சாதாரண அறிவு உள்ளவர்களும் படித்துப் பயன் பெற வாய்ப்பான போதிய புத்தகங்கள் இல்ல நூலகத்தில உண்டு என்கிறார் குப்பிளானைச் சேர்ந்த 75 வயதான மாப்பாணர் திருநாவுக்கரசு.

இந்த உரையாடலில் பலரும் முன்வந்து தமது உள்ளக் கிடக்கைய்யை வெளிப்படுத்தினர். தொல்புரம் மத்தியைச் சேர்ந்த 61 வயதான பொ.விஷ்ணுமூர்த்தி கூறுகையில் "1960களில் கைத்தறி மூலம் நெசவுத்தொழில் செய்தோம். இதன் மூலம் உள்ளூர் உற் பத்தியாக பருத்தியால் நெய்யப்பட்ட புடவை, சாரம், வேட்டி செய் தோம். வட மாகாண நெசவாளர் சங்கம் "நெய்யும் தொழிலே தெய்வம்" என்ற கொள்கையோடு செயற்பட்டது" என்றார்.

தனது தந்தை சிறுவயதில் தனக்கு பகவத்கீதை படிக்கு மாறு கூறியதால்தான் இன்றும் பகவத் கீதையில் மூழ்கியுள்ள தாகத் தெரிவித்தார். உரும்பிராயைச் சேர்ந்த 76 வயதான த.குருநாதன்.

5ஆம் பக்கம் பார்க்க..

# உத்தமர் மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலையில் தீந்தை விளம்பரமா?

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மகாத்மா காந்தியின் சிலையில் பொறிக்கப்பட்டிருக்கும் விளம்பரத்தை அகற்றுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ். மாநகரசபை முதல்வருக்கு அகில இலங்கை காந்தி சேவா சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. சங்கத்தின் பொதுச் செயலாளர் வி.ஜி.தங்கவேல் ஒப்பமிட்டுள்ள 30-08-2010 திகதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் மணிக்கூண்டுக் கோபுரத்துக்குச் செல்லும் சந்தியில் அகிம்ஷாமூர்த்தி காந்தியடிகளின் திருவுருவச் சிலை கடந்த காலத்தில் பெரியோர்களால் நிறுவப்பட்டு யாழ் நகருக்கு அழகு சேர்க்கப்பட்டிருந்தது.

ஆனால், மிக அண்மையில் காந்தி சிலைக்கு வர்ணம் தீட்டியவர்கள் பொறிக்கப்பட்டிருந்த வாசகங்களை மூடித் தீந்தை பூசியதுடன் தமது விளம்பரத்தினையும் கீழ்ப் பகுதியில் விளம்பரப் படுத்தியதன் மூலம் தமது வர்த்தக நோக்கங்களுக்காக அகிலம் போற்றும் அகிம்ஷா மூர்த்தியின் திருவுருவச் சிலையைப் பயன்படுத்தி யுள்ளனர். இதை காந்திய அன்பர்களினால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

ஆகையால், தயவு செய்து குறிப்பிட்ட விளம்பரத் தினை அகற்றுவதற்கு உரிய மேல் நடவடிக்கையினை உடன் மேற்கொள்வதுடன் இவ்விடயம் தொடர்பாகத் தங்களுடன் நேரில் கலந்துரையாட பொருத்தமான திகதி நேரத்தினை ஒதுக்கி அறிவிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்" என்றுள்ளது.

---

# வாசிப்புக் கலாசாரத்தை வளப்படுத்துவோம்

நவீன தொடர்பாடல் சாதனங்களின் பெருக்கத்தினாலும் நுகர்வு மற்றும் விளம்பர கலாசாரத்தின் தாக்கத்தினாலும் மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அருகி வருகிறது. பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் மாணவர்களை "இன்டநெட்" கபேகளிலும் தனியார் கல்வி நிலையங்களிலுமே அதிகமாகக் காணமுடிகின்றது. பல்கலைக் கழக மாணவர்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. மேலும் வீட்டிலுள்ள குடும்பப் பெண்களையும் ஏனையோரையும் தொலைக்காட்சிகளில் ஒளி பரப்பப்படும் தொடர் நாடகங்களும் மற்றும் களியாட்ட நிகழ்வுகளும் பற்றிப் பிடித்துள்ளன. இதிலிருந்து அவர்களை மீட்பது என்பது கல்லில் நார் உரிப்பதை ஒத்த செயலாகும். விரும்பியோ விரும்பாமலோ தொலைக்காட்சியும் இன்ரநெட் மக்களின் இனிய பொழுதுகளைக் காவுகொண்டுள்ளன என்பதை மறக்க முடியாது.

இவற்றின் தாக்கத்தினால் மாணவர்களுக்குப் படிப்பதற்கோ பொது வாசிப்பிற்கோ நேரம் கிடைப்பதில்லை. நூலகங்களிலும் வாசிகசாலைகளிலும் முன்னைய காலங்களைப் போன்றல்லாது உசாத் துணைப் பகுதியிலும் சரி, வாசிக்கும் கூடங்களிலும் சரி, புத்தகம் இரவல் வழங்கும் பகுதிகளிலும் சரி, வரவு வீதம் தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது.

வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும் புதிய நூல்களை அறிமுகப்படுத்தவும் வருடாவருடம் உள்ளூராட்சித் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ்வரும் நூலகங்கள் வாசிப்பு மாதத்தைப் பிரகடனம் செய்து வாசகர் வட்டங்களை உருவாக்கி வாசகர்கள் மத்தியில் போட்டிகளை வைத்து நூல் கண்காட்சியையும் நடத்திவருகின்றமை பாராட்டப் பட வேண்டிய ஒன்றாகும். இந்நிகழ்வுகளிலும் குறிப்பிட்ட ஒரு வட்டத்தைச் சேர்ந்தோரே பங்குபற்றி வருகின்றமையையும் அவதானிக்க முடிகின்றது. இந் நிகழ்வுகள் கிராம மட்டங்களிலும் நடமாடும் நூலக சேவை வாயிலாக விரிவாக்கப் படுமாயின் பலர் நன்மையடைய வழியேற்படும் கிராமங்களில் இயங்கும் சனசமூக நிலையங்களும் தமது வருடாந்த விழாக்களின்போது பொது அறிவுப்போட்டி மற்றும் வருடத்தின் சிறந்த வாசகர் தெரிவு போன்ற வற்றை அறிமுகப்படுத்தி பரிசில்களை வழங்குவதன் மூலமாக வாசிக்கும் பழக்கத்தை ஒவ்வொரு வீட்டிலும் ஏற்படுத்த முடியும். வீடுகளிலும் கவனிப் பாரற்றுக் கிடக்கும் அரிய நூல்களைச் சேகரித்துப் பாதுகாப்பதோடு சனசமூக நிலையங்கள் தமது புத்தக இருப்பையும் அதிகரித்துக்கொள்ள முடியும்.

யுத்தம் நடைபெற்ற இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் அரிய நூல்களும் கலை கலாசார பண்பாட்டுச் சின்னங்களும் தொல் பொருட்களும் பெருந்தொகையாக அழிக்கப்பட்டும் களவாடப்பட்டும் விட்டன. இதனால் இனிவருந் தலைமுறையினர் எங்களுடைய பாரம் பரியமான கலாசாரப் பெறுமானங்கள் பற்றியோ அறிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் பற்றியோ அறிந்து தெரிந்து கொள்வதற்கு ஏற்ற சூழ்நிலை காணப்படவில்லை. இனிவருங் காலங்களில் தற்போது எம்மிடம் எஞ்சியுள்ள நூல்களே எமது வரலாற்றையும் சமூக விழுமியங்களையும் எடுத்தியம்பும் பொக்கிசங்களாக இருக்கப்போகின்றன. எனவே புத்தகங்களை வாசிப்பதும் அவற்றைப் பாதுகாப்பதும் எமது பாரிய பொறுப்பாக மாறியிருக்கின்றது.

காலத்தை பொன்னாகவும் கடமையைக் கண்ணாகவும் மதித்த பெரியார் மகாத்மா காந்தி. அவர் நூல்களை இடைவிடாது படிப்பதோடு கிடைக்கும் கடிதங்களுக்கு அன்றே பதில் எழுதும் பழக்கத்தையும் கொண்டிருந்தார். வாசிப்பு மனிதனை முழு மனிதனாக்குகின்றது என்பார்கள். இயற்கையிலேயே பார்வையை இழந்தவர்கள் பார்ப்பதற்கும் படிப்பதற்கும் எவ்வளவு தாகத்தோடு இருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். "நீ படிக்கும் அறையில் நான் கண்களா புத்தகமா" என்று ஒரு சினிமா கவிஞர் பாடல்வரி எழுதியிருக்கிறார் . இது கண்களினதும் புத்தகத்தினதும் பிரிக்க முடியாத தொடர்பை எமக்கு உணர வைக்கின்றது.

எனவே எமது சமூகத்தின் மத்தியில் மீண்டும் வாசிக்கும் கலாசாரத்தை வளப்படுத்தி பூரணமான ஒரு சமுதாயம் உருவாக எம்மாலான பங்களிப்பை நல்குவோமாக.

-ஆசிரியர்

# ஆதரவற்ற சிறார்களைப் பராமரிக்க வேண்டிய பாரிய கடமை எம்மிடம் உள்ளது.

**-அகில இலங்கை காந்தி சேவா சங்க தலைவர் தெரிவிப்பு**

ஒரு கட்டுக்கோப்பான சமூகத்தை உருவாக்க வேண்டுமானால் ஆதரவு அற்றவர்கள் என்று எவரும் சமூகத்தில் இருக்கக்கூடாது. எமது நாட்டில் இடம்பெற்ற யுத்தம் பல ஆதரவற்ற சிறார்களைச் சமூகத்தில் உருவாக்கிவிட்டுள்ளது. அவர்களைப் பராமரிக்கவேண்டிய பாரிய கடமை எம்மிடம் இருக்கின்றது.

இவ்வாறு அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர் ஆ.வடிவேலு தெரிவித்தார்.

சங்கத்தின் செயற்குழுக்கூட்டம் 04-09-2010 அன்று இல.774, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்டக் கிளை அலுவலகத்தில் நடைபெற்றது. அங்கு தலைமையுரை ஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஒருவரையும் நாம் சமூகத்தில் அந்நியப்படுத்திவிடக் கூடாது. அந்நியப்படுத்தி விலக்கி வைக்கப்படுபவர்களே சமூகத்திற்கு பின்னர் நுளம்பு போன்று தொல்லையாக அமைவார்கள். இவர்களைக் கவனியாது விட்டால் ஒரு கட்டுக் கோப்பில்லாத சமூகம் உருவாக நாம் வழிசெய்தவர்கள் ஆவோம். எமது சங்கம் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் சிறுவர் இல்லத்தையும் பயிற்சி நிலையத்தையும் நடத்தி வந்தது. அந்தப் பணியைத் தொடர்ந்து முன்னெடுத்து ஆதரவற்ற ஏழைச் சிறார் களைப் பராமரித்து வளர்த்து அவர்களைச் சமூகத்தின் தூண் களாக உருவாக்க வேண்டும். இதற்கு எமது சமூகத்தின் ஒவ்வோர் அங்கத்தினரதும் ஆதரவு தேவையாகவுள்ளது" என்றார்.

காந்திய சிந்தனை கற்கைநெறியை ஆரம்பித்து நடத்துவது கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் காந்தி நூலகங்களை இயக்குவது, கிராம மட்டத்தில் காந்தீயம் பத்திரிகையை விநியோகித்து சர்வோதயக் கருத்துக்களைப் பரப்புவது, காந்தி, வினோபா பெயரை உடைய சனசமூக நிலையங்களுக்கு காந்தி படம் வழங்குவது, காந்தி ஜெயந்தியை வழமைபோன்று அனுஷ்டிப்பது போன்ற தீர்மானங்களும் அக்கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

## வாசகர்களுக்கு!

இவ் இதழின் இலவச பிரதியொன்றை தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா.5.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர், "காந்தீயம்" இல. 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.

## அகிம்சையே என் கடவுள்

அகிம்சையே என் கடவுள்; சத்தியமே என் கடவுள்.
அகிம்சையை நான் நாடும்போது, என் மூலம் அதை
அறி என்று சத்தியம் எனக்குக் கூறுகிறது.
சத்தியத்தை நான் நாடும்போது அகிம்சை
"என்னைக் கொண்டு அதைக் காண்" என்கிறது.

**"யங் இந்தியா" 04-06-1925**



வாழ்க நீ! எம்மான் இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக்கெட்டுப்
பாழ்பட்டு நின்றதாமோர்
பாரத தேசந்தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்ம! நீ வாழ்க! வாழ்க!

**பாரதியார்**

## காந்திய சிந்தனைத் தேர்வுக்குரிய நூல்கள்

**சான்றிதழ் தேர்வு**

| | | |
|---|---|---|
| சத்திய சோதனை | - | மகாத்மா காந்தி |
| காந்திஜி | - | டாக்டர். மா.பாதமுத்து |
| காந்தி யுகம் | - | டாக்டர். மா.பா.குருசாமி |
| சர்வோதயம் | - | டாக்டர். மா.பா.குருசாமி |
| அஹிம்சை | - | டாக்டர். அப்துல் ரஸாக் |
| காந்திக்கு முந்திய புரட்சிகள் | - | மகரிஷி.க.அருணாசலம் |

**டிப்ளோமா தேர்வு**

| | | |
|---|---|---|
| காந்தி வழிச் சமயம் | - | தி.சேஷாத்திரி |
| பதினொரு மகாவிரதங்கள் | - | மகாத்மா காந்தி |
| சத்தியமே கடவுள் (ரகுபதி ராகவ) | - | மகாத்மா காந்தி |
| பெண்களுக்கு | - | மகாத்மா காந்தி |
| உலக அமைதிக்கு அகிம்சை வழி | - | மகாத்மா காந்தி |
| வகுப்பு ஒற்றுமை | - | மகாத்மா காந்தி |
| சமூகத்தில் பெண்கள் | - | மகாத்மா காந்தி |
| நிர்மாணத்திட்டம் | - | மகாத்மா காந்தி |
| சர்வோதயம் | - | மகாத்மா காந்தி |
| ஜனநாயகமும் உண்மையும் போலியும் | - | மகாத்மா காந்தி |
| இந்திய சுயராஜ்யம் | - | மகாத்மா காந்தி |
| காந்தி வழி வாழ்க்கை | - | டாக்டர்.ஜே.சி.குமரப்பா |
| உழைப்பு | - | டாக்டர்.ஜே.சி.குமரப்பா |
| காந்தி வழி ஓர் அறிமுகம் | - | க.ரா.கந்தசாமி |
| கோட்பாடுகளில் காந்தியம் | - | டாக்டர்.முத்துலட்சுமி டாக்டர்.ஆண்டியப்பன் |
| காந்திய சிந்தனைகள் | - | டாக்டர்.மா.பா.குருசாமி |
| காந்தி வழி கல்வியும் சமூகமும் | - | டாக்டர்.மா.பாதமுத்து |

**கிடைக்குமிடம்**
காந்திய இலக்கிய சங்கம்
காந்தி மியூசியம், மதுரை - 625 020

## காந்தி நூல்கள் வரவேற்கப்படுகின்றன

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் நூலகங்களை ஆரம்பிக்கவிருக்கின்றது. இந் நூலகங்களுக்குப் புத்தகங்களை அன்பளிப்புச் செய்ய விரும்பும் அன்பர்கள் காந்தி நிலையம், அகில இலங்கை காந்தி சேவா சங்கம், உருத்திரபுரம், கிளிநொச்சி என்ற முகவரியிலும் இல.774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும் தொடர்பு கொண்டு நூல்களை வழங்கலாம் என்றும் மகாத்மா காந்தி தொடர்பான நூல்கள் பெரிதும் வரவேற்கப்படுவதாகவும் சங்கத்தின் பொதுச் செயலாளர் வி.ஜி.தங்கவேல் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களால் அகில இலங்கை சேவா சங்கத்திற்காக யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதி, இலக்கம் 717இல் அமைந்துள்ள தீபம் பதிப்பகத்தில் 2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இதழாசிரியர் : எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி